<u>சுருக்கம்</u>

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்கள் – நூலக புத்தகங்கள் வாங்க முதல்வர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உச்ச வரம்பை ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.163 நாள்: 15.07.2011

ஆனி–30

திருவள்ளுவர் ஆண்டு.2042

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசு ஆணை (2D) எண்.116, உயர்கல்வித் (சி2) துறை, நாள் 21.6.2004.
2. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.63197/கே1/ 2010, நாள் 6.1.2011.

-----

<u>ஆணை:</u>

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களில் உள்ள நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவதற்காக அக்கல்லூரிகளின் முதல்வர்களுக்கு நிதி வரம்பை ரூ.7500/–லிருந்து ரூ.15,000/–ஆக உயர்த்தி மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஆணையில் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கீழ்வரும் காரணங்களின் அடிப்படையில் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களில் புத்தகங்கள் கொள்முதல் செய்ய இக்கல்லூரிகளின் முதல்வருக்கான நிதி அதிகார உச்சவரம்பை ரூ.15,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக உயர்த்தி ஆணை வழங்குமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டார்:–

(i) தற்போதுள்ள நிலையில் All India Council for Technical Education norms–ன்படி பாலிடெக்னிக் நூலகங்களுக்கு போதிய பணியாளர்களின் பற்றாக்குறை நிலவுவதால் நுலகத்தை பொறுத்தவரை நூலகப் பணிகள் அனைத்தையும் நூலகர் ஒருவரே மேற்கொண்டுவரும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ரூ.15,000/–க்குள் புத்தகங்கள் வாங்கப்பட வேண்டும் என்ற விதியின் காரணமாக தேவைப்படும் அனைத்து புத்தகங்களையும் ஒரே தவணையில் வாங்க முடியாத நிலையில் அதற்கான கோப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து பணிப்பளு கூடுகிறது.

(ii) மேலும் ஒரு நிதி ஆண்டில் பரிந்துரைக்கப்படும் புத்தகங்களை இந்த விதியின் காரணமாக வெவ்வேறு காலகட்டங்களில் பிரித்து வாங்கப்படும் போது பெரும்பாலான சமயங்களில் நிறுவனங்களிடமிருந்து அப்புத்தகங்கள்

மற்றவர்களால் முன்கூட்டியே வாங்கப்பட்டுவிடுவதால் இருப்பு இல்லாத நிலையில் தேவையான புத்தகங்களை தேவையான நேரத்தில் வாங்க முடியாத சூழ்நிலை உருவாகின்றது.

(iii) தற்போது பயிலகங்களில் Shift System அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் எண்ணிக்கையும் இருமடங்கு அதிகரித்துள்ளதால் நூலகத்தில் புத்தகங்கள் கொள்முதலும் அதற்கு ஏற்றவாறு அதிகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. Syllabus revision மேற்கொள்ளப்படும் நேரங்களில் இருப்பில் உள்ள சில புத்தகங்கள் வழக்கொழிந்து போய்விடுவதால் புதிய புத்தகங்கள் அதிக எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

4. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்புப் பயிலகங்களில் உள்ள நூலகத்திற்கு புத்தகங்களை வாங்குவதற்காக அக்கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உச்ச வரம்பை அந்தந்த ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்குள்ளேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையில் ரூ.15,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி வழங்கலாம் என கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.23019/நிதி (கல்வி–I)/2011, நாள் 02.05.2011இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25
முதல்வர்கள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும்
சிறப்பு பயிலகங்கள் (தொழில் நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
சம்பள கணக்கு அலுவலர். சென்னை –35.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
<u>நகல் :</u>
உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதித் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

இரா.விஜயகுமார் 15/7/11.
பிரிவு அலுவலர்